தி.நகர், பி.டி. தியாகராயர் கலையரங்கம்போல இராயபுரம் தொகுதியில் கார் பார்க்கிங் வசதியுடன் ஒரு நவீன கலையரங்கம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் மீனவர்கள் அதிகம் வாழும் பகுதியில் அரசின் Model and Smart Higher Secondary School ஒன்றினை பெண்களுக்காக அமைத்துத் தந்திட வேண்டுகிறேன். மேலும், பெண்கள் கலைக் கல்லூரி அமைத்துத் தந்திட வேண்டுகிறேன்.

எனது தொகுதியில், 53-வது வட்டத்தில் மார்டன் சிட்டியில் அமைந்துள்ள பூங்காவினை மறுசீரமைப்பு செய்து மேம்படுத்தி தர வேண்டுகிறேன்.

பெருமாநகராட்சி கட்டுப்பாட்டிலுள்ள வட சென்னையின் பெரிய மயானமான மூலக்கொத்தளம் மயானத்தில் மின் தகன மேடை அமைத்துத் தந்திட வேண்டுகிறேன்.

வட சென்னை பொது மக்கள் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் வாழ கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினை காசிமேடு பகுதியில் உருவாக்கித் தந்திட வேண்டுகிறேன்.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் உபயோகமற்று உடைந்து கிடக்கும் குப்பைத் தொட்டிகளை மாற்றி, தொகுதிக்கு சுமார் 500 புதிய குப்பைத் தொட்டிகளை உடனடியாக வழங்கிட வேண்டுகிறேன். மேலும், உபயோகமற்று உடைந்து கிடக்கும் குப்பை அள்ளிடும் மூன்று சக்கர வண்டிகளை மாற்றி-பேட்டரி பொருத்தப்பட்ட குப்பை அள்ளிடும் 150 வாகனங்களை உடனடியாக வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று வருகை தந்துள்ள அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் அனைவருடனும் கலந்தாலோசிக்கப்பட்டு, பேரவை அலுவலில்

பேரவையின் அனுமதியோடு கீழ்க்காணுமாறு மாற்றங்கள் செய்யப்படுகின்றன:

8–9–2021 (புதன்கிழமை) அன்று, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு, மானியக் கோரிக்கை எண்கள் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை.

அன்று மாலை, மானியக் கோரிக்கை எண் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் 48–போக்குவரத்துத் துறை, 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை. 9–9–2021 (வியாழக்கிழமை) அன்று மானியக் கோரிக்கை எண்கள் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

10–9–2021 (வெள்ளிக்கிழமை), விநாயகர் சதுர்த்தி, அரசு விடுமுறை.

11–9–2021 (சனிக்கிழமை) மற்றும் 12–9–2021 (ஞாயிற்றுக்கிழமை) அரசு விடுமுறைகள்.

13–9–2021 (திங்கட்கிழமை) அன்று மானியக் கோரிக்கை எண்கள் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பதிலுரை. 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, 38–பொதுத் துறை, 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, 1–மாநிலச் சட்டமன்றம், 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை, 16–நிதித் துறை, 35–மனித வள மேலாண்மைத் துறை, 50–ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும், ஏனைய அரசினர் அலுவல்கள்.

பேரவை வழக்கம்போல் காலை 10–00 மணிக்குக் கூடும். 8–9–2021 (புதன்கிழமை) அன்று பேரவை பிற்பகலில் ஐந்து மணிக்குக் கூடும். 13–9–2021 (திங்கட்கிழமை) அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.